முருகப்பெருமான் துணை

**மகான் சுக்கிர பகவான் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**23.04.2023,** ஞாயிற்றுக்கிழமை

1. ஞானதேசிகனே மக்களை காத்திட
ஞான வேள்வி நடத்தி நின்று
தான தரும சக்தி வழிகளை
தனிப்பெருங் கருணையாக அருளி
2. அருளி மக்களின் மேல் மிகுதி
அருட்தயவு காட்டும் அரங்கா
அருளுவேன் உன் பெருமை கூறி
அனுகூல ஆசிதனை சுக்கிர பகவான்யானும்
3. யானும் சோபகிருது தகர்திங்கள்
உண்மைபட தசதிகதி கதிர்வாரம்
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 10 ம் நாள், 23.04.2023 ஞாயிற்றுக்கிழமை)
ஞான உலகமாக உரைப்பேன்
ஞானிகளையே பூசை வழி அடைந்து
4. அடைந்து உலகோர் தேறி
அழியாமை பெறும் வழியை
கொடையாக சன்மார்க்கம் எனும்
குருமார்க்கமாக வழங்கி வர
5. வருமுலகில் மக்கள் எல்லாம்
வணங்கிப் பிரணவக் குடிலில்
முருகா வேலவா எனக் கூறி
முழு சரணடைவு கொண்டுவிட
6. கொண்டுவிட தேசிகன் அருள்
குறைவிலா உற்ற துணையாக
உண்டான சர்வ பலமுமாக
ஒன்றிணைந்து பாதுகாப்புத் தரும்
7. தருவதுடன் தன் செயல்களை
தன்னார்வத் தொண்டாக மாற்றி
குருவின் புகழை உலகெல்லாம்
கொண்டு செல்லும் வண்ணம்

8. வண்ணமுடன் சக்தி கூட்டி
வையகம் முழுக்க மக்களின்
எண்ணம்தனில் நிறைந்துமே
எல்லோரும் ஞானிகளாக மாறுவர்

9. மாறுதல் தரும் மகாசக்தி
மரணத்தையே வெல்லும் சக்தி
ஆறுமுக அரங்கனாய் இருக்க
அகிலத்தில் அரங்கன் அவதாரம்

10. அவதாரம் வெளிவந்தால் போதும்
அறிவுத் தெளிவு ஞானம் கூடி
அவதாரம் மகிமை உணர்ந்து
அனைவரும் வணங்கி வருக

11. வருகவே ஞானிகள் ஆகவே
வையகத்தில் மாற்றம் கண்டு
முருகப்பெருமான் ஆசிபட நிலைப்பர்
மொழிந்திட்ட அனுகூல ஆசி முற்றே

—சுபம்—